DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No. 24/2024**
**P.W. 9**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ரஞ்சித்குமார் |
| Father's Name | : | திரு.நடராஜன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 29 |

(Accused 1and 2 are present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of June 2025.

**முதல் விசாரணை**

நான் கல்பாளையத்தில் வசித்து வருகின்றேன். நான் விராலிமலையில் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். ஒருநாள் மண்ணச்சநல்லூர் காவல் நிலையத்திற்கு பாஸ்போர்ட் விஷயமாக சென்றபோது, என் கையொப்பம் வாங்கினார்கள். ஒப்புதல் வாக்குமூலத்திலும், கைப்பற்றுதல் மகசரிலும் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது ஆகும். அவை முறையே அ.சா.ஆ. 4 மற்றும் 5 ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

| |
|---|
| அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க வேண்டுகோள் விடுக்கப்பட்டது. சாட்சியின் முந்தைய வாக்குமூலத்தை பரிசீலத்து பாரதிய சாட்சிய அதினியம் பிரிவு 157-ன் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது. |

**<u>குறுக்கு விசாரணை( அரசு தரப்பில் )</u>**

காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார் என்றும், அப்போது 31.01.2024 ஆம் தேதி காலை 7 மணிக்கு நானும், எங்கள் தெருவை சேர்ந்த பிரகாஷ் என்பவரும் நங்கமங்கலம் சத்திரம் பஸ் ஸ்டாப் அருகே நின்றுகொண்டிருந்தோம் என்றும், எதிரிகளை போலிசார் கைது செய்தபோது, எதிரி சதீஸ்குமார் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதன்படி தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து ஆஜர் படுத்தினான் என்றும், காவல் துணை கண்காணிப்பாளர் அதை எங்கள் முன்பு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார் என்றும் ஒப்புதல் வாக்குமூலத்திலும், கைப்பற்றுதல் மகசரிலும் கையெழுத்து செய்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Acopy